வகுப்புத் தலைப்புகள்

பொருட்கள்

**வகுப்பு 1** கைத்தொழில், விஞ்ஞானம், நிழற்படக்கலை, தோட்டக்கலை, வனவியல், கமத்தொழிலில் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்கள்; பதனிடப்படாத செயற்கைப் பிசின்கள், பதனிடப்படாத பிளாஸ்திரிகள்; தீயினை அணைக்கும் மற்றும் தடுக்கும் கலவைகள்; உலோகங்களைக் கெட்டி ஆக்கும் மற்றும் பற்றாசு பிடித்து இணைக்கும் தயாரிப்புகள்; விலங்குத் தோல்கள் மற்றும் உரிவைகளைப் பதனிடும் பதார்த்தங்கள்; கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் ஒட்டுப் பொருள்கள்; மெருகு சுண்ணத்தூள்கள் மற்றும் ஏனைய பசை நிரப்பிகள்; கலப்பு உரங்கள், எருக்கள், பசளைகள்; கைத்தொழில் மற்றும் விஞ்ஞானத்தில் பயன்படுத்துவதற்கான உயிரியல் தயாரிப்புகள்.

**வகுப்பு 2** பூச்சிடுதற் பொருள்கள், வானிசுகள், மெருகு; மரம் உழுத்துப்போகாமலும் கறள் பிடிக்காமலும் இருப்பதற்கான பாதுகாப்புப் பொருட்கள், நிறமுள்ளதாகக் காட்டும் பொருட்கள், சாயங்கள்; அச்சிடுதல், அடையாளமிடுதல் மற்றும் செதுக்கு வேலைக்கான மைகள்; மூல இயற்கையான பிசின்கள், வண்ணம் தீட்டுதல், அலங்கரித்தல், அச்சிடுதல், வரைதல் என்பவற்றில் பயன்படுத்துவதற்கான மென் தகடு மற்றும் தூள் வடிவத்திலான உலோகங்கள்.

**வகுப்பு 3** மருந்து சேர்க்கப்படாத ஒப்பனைச் சாதனங்கள் மற்றும் குளியலறைப் பொருட்கள்; மருந்து சேர்க்கப்படாத பற்பசைகள்; வாசனைப் பொருட்கள், அத்தியாவசிய எண்ணெய்கள்; சலவைத் தொழிலுக்கான வெளிறச்செய்யும் தயாரிப்புகள் மற்றும் வேறு பதார்த்தங்கள்; துப்புரவாக்கல், மினுக்கல், அழுக்கை நீக்குதல் மற்றும் உராய்வுத் தயாரிப்புகள்.

**வகுப்பு 4** கைத்தொழில் எண்ணெய் மற்றும் கொழுப்புகள், மெழுகு; உராய்வு நீக்கிகள்; தூசியை உறிஞ்சி எடுக்கும், ஈரமாக்கும் மற்றும் இணைக்கும் கலவைகள், எரிபொருட்கள் மற்றும் ஒளிபிறப்பிக்கும் பொருட்கள், மெழுகுதிரிகள் அத்துடன் ஒளி ஏற்றுவதற்கான திரிகள்.

**வகுப்பு 5** மருந்தாக்கல், மருத்துவ, விலங்கு மருத்துவத் தயாரிப்புகள்; மருத்துவ நோக்கங்களுக்கான சுகாதாரத் தயாரிப்புகள்; மருத்துவ அல்லது விலங்கு மருத்துவப் பாவனைக்காக இசைவாக்கப்பட்ட உண்டிசார் பதார்த்தங்கள், குழந்தைகளுக்கான உணவுகள்; மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கான உண்டிசார் நிரப்புப் பொருட்கள்; பிளாஸ்திரிகள், காயங்களுக்குக் கட்டும் துணிகள்; பற்றடைப் பொருட்கள், பல்மெழுகு; தொற்றுத் தடைப் பொருட்கள்; புழு பூச்சிகளைக் கொல்வதற்கான தயாரிப்புகள், பங்கசு கொல்லிகள், செடிவகைக்கொல்லிகள்.

**வகுப்பு 6** பொது உலோகங்களும் அவற்றின் கலப்புகளும், தாதுப் பொருட்கள்; கட்டிட மற்றும் நிர்மாணத்திற்கான உலோகப் பொருள்கள்; உலோகத்திலான இடம்பெயர்க்கப்படற்பாலனவான கட்டிடங்கள்; மின்சாரம் சாரா வடங்களும் பொது உலோகத்திலான கம்பிகளும்; சிறு உலோக இரும்புப் பெட்டிகள்; களஞ்சியப்படுத்தல் அல்லது போக்குவரத்திற்கான உலோகத்திலான கொள்கலன்கள்; காப்புப் பெட்டிகள்.

**வகுப்பு 7** இயந்திரங்களும், இயந்திரக் கருவிகளும், ஆற்றலினால் இயக்கப்படும் கருவிகள்; மோட்டார்களும் எஞ்சின்களும் (நில வாகனங்கள் தவிர); இயந்திரம் இணைத்தல் மற்றும் செலுத்துதல் ஆக்கக்கூறுகள் (நில வாகனங்கள் தவிர); கையினால் இயக்கப்படும் கருவிகள் தவிர்ந்த கமத்தொழிற் கருவிகள்; முட்டைகளுக்கான அடைகாத்தல் இயந்திரங்கள்; தன்னியக்கப் பொருள் வழங்கும் இயந்திரங்கள்.

**வகுப்பு 8** கைக் கருவிகளும் உபகரணங்களும் (கையினால் இயக்கப்படக்கூடியன); முள்கத்திகள், பக்க ஆயுதங்கள் (சுடுபடைக்கலங்கள் தவிர); சவரக்கத்திகள்.

**வகுப்பு 9** விஞ்ஞான, ஆராய்ச்சி, கடற்பிரயாண வழிசெலுத்தல், நில அளவையிடல், நிழற்படஞ்சார், இயக்கப்பட, கேட்பொலிக் காட்சி, கட்புல, நிறையிடுதல், அளவையிடுதல், சைகை காட்டுதல், கண்டறிதல், பரிசோதித்தல், மேற்பார்வை செய்தல், உயிர்காத்தல், கற்பித்தல் உபகரணங்களும், கருவிகளும்; மின்சார விநியோகம் அல்லது பாவனைக்கான இயக்குதல், ஆளியிடல், மாற்றுதல், சேர்த்தல், ஒழுங்குபடுத்தல் அல்லது கட்டுப்படுத்தல் உபகரணங்களும் கருவிகளும்; ஒலி, உருவங்கள் அல்லது தரவினைப் பதிதல், செலுத்துதல், மீள அமைத்தல் அல்லது செயலாக்கம் செய்தல் என்பவற்றுக்கான உபகரணங்களும் கருவிகளும்; பதியப்பட்ட மற்றும்



Please see this link: https://www.wipo.int/classifications/nice/nclpub/en/fr/

பதிவிறக்கம் செய்ய முடியுமான ஊடகங்கள், கணனி மென்பொருள், வெற்று டிஜிட்டல் அல்லது ஒத்த பொருள் பதிதல் மற்றும் களஞ்சியப்படுத்தல் ஊடகங்கள்; நாணயத்தினால் இயக்கப்படும் உபகரணங்களுக்கான இயந்திரநுட்பங்கள்; காசுப்பதிவேடுகள், கணிப்பு இயந்திரங்கள்; கணனிகள் மற்றும் கணனி புறசாதனங்கள்; சுழியோடுவதற்கான அங்கிகள், சுழியோடிகளுக்கான முகமூடிகள், சுழியோடிகளுக்கான காது செருகிகள், சுழியோடிகள் மற்றும் நீச்சலடிப்போருக்கான மூக்கு கவ்விகள், சுழியோடிகளுக்கான கையுறைகள், நீரின் கீழ் நீச்சலடிப்பதற்கான சுவாச உபகரணங்கள்; தீயணைப்பு உபகரணங்கள்.

**வகுப்பு 10** சத்திரசிகிச்சை, மருத்துவ, பல் மற்றும் விலங்கின உபகரணங்களும் கருவிகளும்; செயற்கை உறுப்புக்கள், கண்கள், பற்கள்; கை கால் முறிவு தறிவுப் பொருட்கள்; மருத்துவ சிகிச்சை தையற் பொருள்கள்; அங்கவீனமுடைய நபர்களுக்கெனத் தகவமைக்கப்பட்ட நோய்நீக்கும் மற்றும் துணைச்சாதனங்கள்; மசாஜ் உபகரணங்கள்; கைக்குழந்தைகள் வளர்ப்புக்கான சாதனங்கள் மற்றும் பொருட்கள்; பாலியல் செயற்பாட்டு உபகரணங்கள், சாதனங்கள் மற்றும் பொருட்கள்.

**வகுப்பு 11** ஒளியேற்றுதல், சூடாக்குதல், குளிரூட்டல், நீராவி பிறப்பித்தல், சமைத்தல், உலர்த்தல், காற்றைச் சீராக்குதல், நீர் வழங்கல் மற்றும் சுகாதார நோக்கங்களுக்கான உபகரணங்கள் மற்றும் நிறுவுதல்கள்.

**வகுப்பு 12** வாகனங்கள்; நிலத்தில், வானில் அல்லது நீரில் நகர்வதற்கான உபகரணங்கள்.

**வகுப்பு 13** சுடுபடைக்கலங்கள்; வெடி மருந்துகள் மற்றும் வீசு குண்டுகள்; வெடிபொருட்கள்; வான வெடிகள்.

**வகுப்பு 14** விலையுயர்ந்த உலோகங்கள் மற்றும் அவற்றின் கலவைகள்; நகைத்தொகுதி, விலையுயர்ந்த மற்றும் பகுதியளவு விலையுயர்ந்த கற்கள், காலமானி மற்றும் மணிப்பொருட் கருவிகள்.

**வகுப்பு 15** சங்கீத இசைக்கருவிகள்; இசை ஆதார தாங்கிகள் மற்றும் சங்கீத இசைக்கருவிகளுக்கான ஆதார தாங்கிகள்; இசைக்குழு இயக்குநரின் கோல்கள்.

**வகுப்பு 16** கடதாசி, அட்டைப் பலகை; அச்சிடப்பட்ட பொருட்கள்; புத்தகம் கட்டும் பொருட்கள்; நிழற்படங்கள்; எழுதுகருவி வகைகள் மற்றும் அலுவலகத் தேவைகள் (தளபாடம் தவிர); எழுதுகருவி வகைகள் அல்லது வீட்டுப் பாவனைக்குத் தேவையான ஒட்டுப் பொருட்கள்; வரைதல் பொருட்கள் மற்றும் வரைவோருக்கான பொருட்கள்; வர்ணத் தூரிகைகள்; போதனா மற்றும் கற்பித்தற் பொருட்கள்; உறையிடுதல் மற்றும் பொதியிடுவதற்கான பிளாஸ்திக் தாள்கள், மென்படலங்கள் மற்றும் பைகள்; அச்சு வகைகள், அச்சுத் துண்டங்கள்.

**வகுப்பு 17** பதனிடப்படாத மற்றும் பகுதியளவு பதனிடப்பட்ட இறப்பர், கட்டர் – பேர்ச்சா, பசை, கன்னார், மைக்கா மற்றும் இந்த அனைத்துப் பொருட்களுக்கான பதிலீடுகள்; உற்பத்தியில் பயன்படுத்துவதற்கான வெளிப்படுத்தப்பட்ட வடிவத்திலான பிளாஸ்திரிகள் மற்றும் பிசின்கள்; பொதியிடுதல், அடைத்தல் மற்றும் உள்ளீர்த்தல் பொருட்கள்; உலோகத்தினால் ஆக்கப்பட்டவையல்லாத வளையத்தக்க குழாய்கள், டியுப்கள் மற்றும் நெளிவுடைய நீண்ட குழாய்கள்.

**வகுப்பு 18** தோலும், போலித் தோலினாலான பொருட்களும்; விலங்குத் தோல்கள், உரிவைகள்; பயணப் பெட்டிகள் மற்றும் எடுத்துச் செல்லும் பைகள்; குடைகள், சிறு குடைகள், உலாத்து கம்புகள்; கசைகள், கடிவாளங்களும், சேண வகைகளும்; விலங்குகளுக்கான கழுத்துப்பட்டைகள், சவுக்குகள் மற்றும் ஆடைப்பொருட்கள்.

**வகுப்பு 19** கட்டிடம் மற்றும் நிர்மாணத்திற்கான உலோகமற்ற பொருட்கள்; கட்டிடங்களுக்கான உலோகமல்லாத கெட்டியான குழாய்கள்; அஸ்பால்ற், பிச், தார் மற்றும் பிடுமென்; உலோகமல்லாத இடம்பெயர்க்கத்தக்க

கட்டிடங்கள்; உலோகத்தினாலல்லாத நினைவுச் சின்னங்கள்

**வகுப்பு 20** தளபாடங்கள், கண்ணாடிகள், படச் சட்டங்கள்; களஞ்சியப்படுத்தல் அல்லது போக்குவரத்திற்கான உலோகத்தினாலல்லாத கொள்கலன்கள்; வேலை செய்யப்பட்டிராத அல்லது பகுதியளவு வேலை செய்யப்பட்ட எலும்பு, கொம்பு, திமிங்கில எலும்பு அல்லது தாய்முத்து; மேலோடுகள்; மீச்சர்; மஞ்சள் அம்பர்.

**வகுப்பு 21** வீட்டுப் பாவனை அல்லது அடுக்களை பாத்திரங்களும், கொள்கலன்களும்; முள்கத்திகள், கத்திகள் மற்றும் கரண்டிகள் தவிர்ந்த சமையல் பாத்திரங்கள் மற்றும் மேசைப் பொருட்கள்; சீப்புகளும், பஞ்சுகளும்; தூரிகைகள் (வர்ணத் தூரிகைகள் தவிர); தூரிகை தயாரிக்கும் பொருட்கள்; துப்புரவு செய்யும் நோக்கத்திற்கான பொருட்கள்; வேலையற்ற அல்லது ஓரளவு வேலை செய்யப்பட்ட கண்ணாடிகள் (கட்டிடங்களுக்குப் பயன்படுத்தப்படும் கண்ணாடிகள் தவிர); கண்ணாடித் தொகுதிகள், மட்பாண்டங்களும், பீங்கான் தொகுதிகளும்.

**வகுப்பு 22** கயிறுகள், கம்பி வளையங்கள்; வலைகள்; கூடாரங்கள், தார்ப்பாய்கள்; புடவை அல்லது செயற்கைப் பொருட்களினாலான அவுணிங்ஸ்; பாய்கள்; பொருட்களைப் பேரளவில் எடுத்துச் செல்லுதல் மற்றும் களஞ்சியப்படுத்தலுக்கான சாக்குகள்; திணிப்பு, மெத்தையிடல் மற்றும் அடைக்கும் பொருட்கள் (கடதாசி, அட்டைப்பலகை, இறப்பர் அல்லது பிளாஸ்திரியினால் அல்லாத); மூல இழை புடவைப் பொருள்கள் மற்றும் அவற்றுக்கான பதிலீடுகள்.

**வகுப்பு 23** புடவைப் பாவனைக்கான நூலும், புரியும்.

**வகுப்பு 24** புடவைகளும் புடவைகளுக்கான பதிலீடுகளும்; வீட்டுப் பாவனைத் துணி; புடவை அல்லது பிளாஸ்திரியினாலான திரைச்சீலைகள்.

**வகுப்பு 25** ஆடைப்பொருட்கள், காலணி, தலையணி.

**வகுப்பு 26** சரிகை, பின்னல், சித்திரத் தையல், மற்றும் சில்லறை உடுப்புகள் றிபண்கள், அணி முடிச்சுகள்; பொத்தான்கள், கொளுவிகள், கண்கள், ஊசிகள், தையல் ஊசிகள்; செயற்கைப் பூக்கள்; முடி அலங்காரங்கள்; போலி முடி.

**வகுப்பு 27** கம்பளங்கள், தரை விரிப்புகள், பாய்கள், பாய் விரிப்புப் பொருட்கள், லினோலியமும் ஏலவேயுள்ள தளங்களை மூடுவதற்கான ஏனைய பொருட்களும், சுவர் தொங்கிகள் (புடவையினால் அல்லாதவை).

**வகுப்பு 28** விளையாட்டுக்கள், பொம்மைகள், விளையாட்டுப் பொருட்கள்; காணொளி விளையாட்டு உபகரணங்கள்; உடற்பயிற்சி விளையாட்டுப் பொருட்கள்; நத்தார் மரங்களுக்கான அலங்கார வேலைப்பாடுகள்.

**வகுப்பு 29** இறைச்சி, மீன், கோழிப் பண்டங்கள், வேட்டை இறைச்சி; இறைச்சிப் பகுதிகள், பாதுகாத்த, உறைந்த, உலர்ந்த, சமைத்த பழங்களும் மரக்கறி வகைகளும்; ஜெலிகள், பழச்சாறுகள் மற்றும் கிழங்கு வகைகள்; முட்டைகள், பால், பாலாடைக்கட்டி, வெண்ணெய், யோகட் மற்றும் ஏனைய பால் உற்பத்திப் பொருட்கள்; உணவுக்கான எண்ணெய்களும், கொழுப்புகளும்.

**வகுப்பு 30** கோப்பி, தேயிலை, கொக்கோ, செயற்கைக் கோப்பி; அரிசி, பெஸ்டா, நூடில்ஸ்; மரவள்ளி, சவ்வரிசி; மாவும் தானியங்களில் இருந்து பெறப்பட்ட தயாரிப்புகளும்; பாண், பணியாரங்கள், அப்ப வகைகள்; சொக்கலட்; ஐஸ் கிரீம், சர்பத் மற்றும் ஏனைய உண்ணத்தக்க ஐஸ்; சீனி, தேன், பாகு; நொதி, அப்பச்சோடா; உப்பு,



Please see this link: https://www.wipo.int/classifications/nice/nclpub/en/fr/

சுவையூட்டிகள், வாசனைத் திரவியங்கள், பாதுகாத்த மூலிகைகள்; வினாக்கிரி, சோஸ் மற்றும் ஏனைய கறிக் கூட்டுகள்; ஐஸ் (உறைந்த நீர்).

**வகுப்பு 31** மூல மற்றும் பதனிடப்படாத கமத்தொழில், மீன்வளர்ப்பு, தோட்டக்கலை மற்றும் வனவியல் உற்பத்திப் பொருட்கள்; மூல மற்றும் பதனிடப்படாத தானியங்களும், விதைகளும்; புதிய பழங்களும் மரக்கறிகளும், புதிய மூலிகைகள்; இயற்கையான செடிகளும், மலர்களும்; கிழங்குகள், நாற்றுகள் மற்றும் நடுவதற்கான வித்துக்கள்; உயிர் வாழ் மிருகங்கள்; விலங்குகளுக்கான உணவுப் பொருட்கள் மற்றும் குடிபானங்கள்; மோல்ட்.

**வகுப்பு 32** பியர்கள்; அற்கோல் சேர்க்கப்படாத குடிபானங்கள்; கனிப்பொருள் மற்றும் வாயுப்பானங்கள்; பழக் குடிபானங்களும், பழச் சாறுகளும்; சிறப்புகளும், குடிபானங்களைத் தயாரிப்பதற்கான அற்கோல் சேர்க்கப்படாத வேறு தயாரிப்புகளும்.

**வகுப்பு 33** வெறியக் குடிபானங்கள் (பியர்கள் தவிர); குடிபானங்களைத் தயாரிப்பதற்கான அற்கோல் தயாரிப்புகள்.

**வகுப்பு 34** புகையிலை மற்றும் புகையிலைப் பதிலீடுகள்; சிகரெட்கள் மற்றும் சுருட்டுகள்; புகைப்போருக்கான இலத்திரனியல் சிகரெட்கள் மற்றும் வாய்மூலம் ஆவியாக்கும் கருவிகள்; புகைப்போர் பொருட்கள்; தீக்குச்சிகள்.



Please see this link: https://www.wipo.int/classifications/nice/nclpub/en/fr/

# Nice Classification - 11 Edition, Version 2020

*Class Headings*

## Services

**வகுப்பு 35** விளம்பரப்படுத்தல்; தொழில் முகாமைத்துவம்; தொழில் நிர்வாகம்; அலுவலகப் பணிகள்.

**வகுப்பு 36** காப்புறுதி; நிதி அலுவல்கள்; பண அலுவல்கள்; ஆதன அலுவல்கள்.

**வகுப்பு 37** நிர்மாணச் சேவைகள்; நிறுவுதல் மற்றும் திருத்தச் சேவைகள்; சுரங்க அகழ்வு, எண்ணெய் மற்றும் வாயு அகழ்வுப் பணிகள்.

**வகுப்பு 38** தொலைத்தொடர்பூச் சேவைகள்.

**வகுப்பு 39** போக்குவரத்து; பண்டங்களைப் பொதியிடலும், களஞ்சியப்படுத்தலும்; பயண ஒழுங்குகள்.

**வகுப்பு 40** பொருட்கள் பதனிடுகை; கழிவு மற்றும் குப்பைகளை மீள்சுழற்சி செய்தல்; வாயு சுத்திகரிப்பு மற்றும் நீர்ப் பதனிடுகை; அச்சிடல் சேவைகள்; உணவு மற்றும் பானங்கள் பாதுகாப்பு.

**வகுப்பு 41** கல்வி; பயிற்சியளித்தல்; களியாட்டம்; விளையாட்டு மற்றும் கலாச்சாரச் செயற்பாடுகள்.

**வகுப்பு 42** விஞ்ஞான, தொழிநுட்பச் சேவைகளும் அது தொடர்பான ஆராய்ச்சியும், வடிவமைப்பும்; கைத்தொழில் பகுப்பாய்வு, கைத்தொழில் ஆராய்ச்சி மற்றும் கைத்தொழில் வடிவமைப்புச் சேவைகள்; தரக் கட்டுப்பாடு மற்றும் சான்றளிப்புச் சேவைகள்; கணனி மென்பொருள், வன்பொருள் வடிவமைப்பும், அபிவிருத்தியும்.

**வகுப்பு 43** உணவு, குடிபானங்களை வழங்குவதற்கான சேவைகள்; தற்காலிக இடவசதி.

**வகுப்பு 44** மருத்துவச் சேவைகள்; விலங்குகளுக்குச் சேவைகள்; மனிதருக்கான அல்லது விலங்கினங்களுக்கான சுகாதாரம் அழகுபடுத்தும் பொருட்கள்; கமத்தொழில், மீன்வளர்ப்பு, தோட்டக்கலை மற்றும் வனவியற் சேவைகள்.

**வகுப்பு 45** சட்டச் சேவைகள்; தொட்டறியக் கூடிய சொத்துக்கள் மற்றும் தனிநபர்களின் பௌதீகப் பாதுகாப்புக்கான பாதுகாப்புச் சேவைகள்; தனிப்பட்டவர்களின் தேவைகளை ஈடுசெய்வதற்கு மற்றவர்களினால் வழங்கப்படும் சொந்த மற்றும் சமூக சேவைகள்.



Please see this link: https://www.wipo.int/classifications/nice/nclpub/en/fr/